# ஓம் ஸ்ரீ சாயிராம்
# வினா விடை நேரம்
# கேள்வி எண் 305
# சுவாமியின் அருள்

நம் அன்புக்குறிய பேராசிரியர் திரு அனில்குமார் சாயிராம் சார் அவர்களின் சத்யோபனிஷத் புத்தகம் வால்யூம் ஒன்றிலிருந்து தேர்வு செய்யபட்ட கேள்வி பதில் பகுதி. 1, பக்கங்கள் 26-29.

கேள்வி:ஸ்வாமி எங்களால் பல சமயங்களில் தெய்வீக பேரருளை பெற முடியாமல் போகிறது.
இதற்கான காரணம் என்ன என்பதை தாங்கள் தெளிவு படுத்த வேண்டும் ஸ்வாமி

ஸ்வாமியின் தெய்வீக விளக்கம்:

நீங்கள் எல்லோரும் அவ்வாறு நினைப்பது சரியல்ல.
அது தவறானதும் கூட.
கடவுளின் பேரருள் எப்போதும் அனைவருக்கும் சமமானதாக பொதுவானதாக இருக்கிறது.
அது ஜாதி மதம் ஆண் பெண் தேசாபிமானங்களை கடந்து பொதுவானதாக உள்ளது.
கடவுளின் அருளை பெறமுடியாமல் போவதற்கு காரணம் உங்களிடம் உள்ள குறைகள்தான்.
உங்களின் ஹ்ருதய பாத்திரத்தை நீங்கள் சுத்தமாக வைத்திருப்பதில்லை.

மழை நீரை சேகரிக்க வேண்டும் என்றால் மழை பெய்யும் போது பாத்திரத்தை நேராக வைக்க வேண்டும்.
பாத்திரத்தை தலைகீழாக கவிழ்த்து வைத்தால் அதில் மழை நீர் எப்படி நிரம்பும்

எனவே உங்கள் ஹிருதயத்தை எப்பொழுதும் சுத்தமாக கடவுளின் அருள் மழையை பெறுவதற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.
கடவுளின் அன்பிற்காக ஏங்கி காத்திருக்க வேண்டும்.

கேள்வி -
ஸ்வாமி உங்களின் அன்புக்கும் கருணைக்கும் உறியவர்களாக இருப்பது எவ்வாறு

ஸ்வாமி:இந்த உலகில் உள்ள பல கோடி பேர்களில் நீங்கள் ஒரு சிலர் மட்டுமே இங்கு வர முடிந்தது அல்லவா.
இது உங்களின் முந்தைய பிறவிகளிலே நீங்கள் செய்த நற்கருமங்களின் பயனே ஆகும்.
நம் கல்வி நிறுவனங்களிலே படிக்கின்ற ஆயிரக்கணக்கான மாணவர்களிடையே நீங்கள் ஒரு சிலர் மட்டுமே என்னுடன் கொடைக்கானல் வர முடிந்தது அல்லவா
இந்த நற்பேற்றினை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.
ஒரு நூல் கண்டை சுற்றும் போது மிக கவனமுடன் சரியாக செய்ய வேண்டும் அல்லவா
கை தவறி நூல் கீழே விழுந்தால் அனைத்து முயற்சியும் வீண் ஆகிவிடுகிறது.
நூல் கண்டின் நடுவிலுள்ள அட்டையே இறை நம்பிக்கை என்பதாகும்.
நூலை சுற்றுவது என்பது நற் கருமங்களில் ஈடுபடுவதாகும்.

நல்ல செயல்கள் செய்வதை சாதரணமாக எடுத்து கொள்ளாதீர்கள்.
நீங்கள் அஜாக்கிரதையாக அலட்சியமாக இருந்து அதன் பலன்களை வீணடித்து கொள்ளாதீர்கள்.
எனவே இப்போது உங்களுக்கு கிடைத்திருக்கும் இந்த நற்பேற்றினை எண்ணி தொடர்ந்து நற்கருமங்களில் ஈடுபட்டு வாருங்கள்.

கேள்வி: ஸ்வாமி உங்களுடைய தெய்வீக அருள் என்பது எங்களுடைய விதி பயனை எவ்வாறு மாற்றுகின்றது

ஸ்வாமி:தெய்வத்தின் சங்கல்பம் என்ற பேரருள் எதையும் மாற்றகூடிய வல்லமை கொண்டது.அன்பே கடவுள்.
அந்த பவித்ரமான ப்ரம்மாண்ட ப்ரேம சக்தி உங்களுடைய பல பிறவிகளின் ஊழ் வினை பயன்களையும் மாற்றிவிட வல்லது.

கடவுளை உங்கள் ஹ்ருதயத்திலே அன்பெனும் சிறையில் நீங்கள் பூட்டி விட்டால் அது கர்ம வினைகளின் தாக்கத்திலிருந்து உங்களை பாதுகாத்து நிற்கும்.
இறைவன் மீது கொண்ட பக்தியால் சாதிக்க முடியாதது எதுவுமே இல்லை.

மருந்து தயாரிக்கும் போது அந்த மருந்தின் மேல் கால முதிர்வு என்று குறிப்பிடுகிறார்கள் அல்லவா.
குறிப்பிட்ட அந்த தேதிக்கு பிறகு அந்த மருந்து பயனற்றதாகிவிடுகிறது.

ஸ்வாமி செய்வதும் அப்படித்தான்.

நீங்கள் உங்களின் ஊழ் வினை பயன்களால் இந்த பிறவியில் துன்பங்களை அனுபவிக்கும் போது ஸ்வாமி குறுக்கிட்டு அந்த ப்ராரப்த கர்மாவை கால முதிர்வு அடைந்ததாக அதாவது சக்தி இல்லாது பயனற்றதாக செய்து விடுகிறார்.
நீங்கள் இதய தூய்மையுடன் இறைபக்தியுடன் நற்கருமங்களில் ஈடுபட்டு வரும்போது ஸ்வாமி கர்ம வினை பயன்களிலிருந்து உங்களை காப்பாற்றுகிறார்.

கேள்வி:ஸ்வாமி நாங்கள் நன்நடத்தையுடன் ஆன்மீக பயற்சிகளை மேற்கொள்ளும் போது அந்த ஆன்மீக சாதனைகளுக்கு நிச்சயமாக பலன் கிடைக்குமா

ஸ்வாமி:எதற்காக இந்த சந்தேகம் வந்தது.
உங்கள் செல்ல பிராணியை நீங்கள் அன்புடன் போஷிக்கும் போது அது உங்களிடம் நன்றியுடன் இருக்கிறது அல்லவா.
அப்படியென்றால் கடவுள் உங்கள் மீது கருணை காட்டாமல் இருப்பாரா.

கேள்வி:ஸ்வாமி நாங்கள் உங்களின் அளப்பரிய அன்பையும் கருணையையயும் பெற்றதால் தானே இதோ உங்களுடன் இருந்து உங்களின் தெய்வீக தர்ஷன் ஸ்பர்ஷன் சம்பாஷன் அனைத்தையும் அனுபவித்து கொண்டிருக்கிறோம்.
இதற்கு மேலும் நாங்கள் ஆன்மீக பயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம்தானா

ஸ்வாமி:மிக மிக அவசியமாகும்.
சாதாரண மழை பெய்யும் போது அந்த நீர் மணலுக்குள் சென்றுவிடும்
ஆனால் பெரிய மையில் நீர் பெருக்கெடுத்து ஓடும் அல்லவா
அது போல் இப்போது நீங்கள் ஆனந்தத்தில் இருந்தாலும் இந்த நிலை தொடரவும் ஆன்மீக பயணத்தில் மேலும் மேலும் முன்னோக்கி செல்லவும் ஆன்மீக சாதனைகளில் தொடர்ந்து ஈடுவது அவசியமாகும்.
கிணற்றிலிருந்து நீர் இறைக்கும் போது நீரால் நிரம்பிய வாளியை நீங்கள் தானே பற்றி இழுக்க வேண்டும்.

அதுபோல் தான் ஆன்மீக சாதனைகளில் ஈடுபடுவதும்.
பக்தனின் முயற்சி தொடர தொடர கடவுளின் கருணையும் அனுக்ரஹமும் அதை தீவிர படுத்தி இறுதி வெற்றியை பக்தருக்கு பெற்று தருகிறது.

கடவுளின் மீது நீங்கள் வைக்கின்ற பவித்ரமான ப்ரேமையானது உங்களுக்காக எதையும் சாதித்து விடும்.

அனைவருக்கும் நன்றி
ஜெய் சாயிராம்!